திரு. அ. ஆறுமுகம் : தண்ணீர்த் தீர்வையை ஒரு தடவையாக வசூலிப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, 2 தவணை முறையில் வசூலிக்க அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தது. தண்ணீர்த் தீர்வை குறைவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோள்படி கேள்விகள் 591, 592 ஒத்திவைக்கப்படுகின்றன.

Cattle feed mixing centre at Madurai.

*593 Q.—THIRU K. M. RAMASWAMY GOUNDER : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(*a*) whether there is any proposal to start a cattle feed mixing centre at Madurai; and

(*b*) if so, the stage at which the matter now stands?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) மதுரையில் கால்நடைத் தீவனங்களைக் கலவை செய்யும் புதிய தொழிற் பிரிவு ஒன்றை நிறுவும் செயற்குறிப்பு எதுவுமில்லை. ஆனால், ஸ்ரீவில்லிப்புத்தூர் பால்வழங்கு கூட்டுறவுச் சங்கத்திலும், காரைக்குடி பால் வழங்கு கூட்டுறவுச் சங்கத்திலும் உள்ள நாளொன்றுக்கு 3 டன் உற்பத்தித் திறனளவு கொண்ட இரு சிறு கால்நடைத் தீவனக் கலவை இயந்திரங்கள், உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்படுகிற தானியங்களைக் கொண்டு கால்நடைத் தீவனம் தயாரிப்பதற்காகத் தற்காலிகமாய் மதுரை பால் பண்ணைக்கு மாற்றப்பட்டுள்ளன.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : மற்ற மாவட்டங்களுக்கும் இந்தத் துறையை விஸ்தரிக்க யோசனை உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக் கேள்வி போடவும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருந்து கால்நடைத் தீவனங்களைக் கலவை செய்யும் இயந்திரங்கள் மதுரைக்குத் தற்காலிகமாக மாற்றப்பட்டதற்குக் காரணம் என்ன? நிரந்தரமாக அங்கேயே ஒரு நிலையம் ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கே கொண்டு போய் அமைப்பதன் மூலம் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு விநியோகிக்க வழியேற்படும் என்பதுதான். அது பலனுள்ளதாக இருக்குமானால் நிரந்தரமாக்கப்படும். புதிய இயந்திரங்களும் தருவிக்கப்படும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : கூட்டுறவு பால் பண்ணைகளுக்கே இந்தத் தீவனங்கள் வழங்கப்படுகின்றன. தனிப்பட்டவர்களும்கூட பால் பண்ணை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் வழங்க சர்க்கார் யோசிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நல்ல யோசனை. தனிக் கேள்வி போட்டால் பரிசீலிக்கலாம்.